# ජාතික අධ්‍යාපන කොමිෂන් සභාව

වාර්ෂික වාර්තාව

2019

# தேசிய கல்வி ஆணைக்குழு

வருடாந்த அறிக்கை

2019

# National Education Commission

Annual Report

2019

නො. 126, නාවල පාර, නුගේගොඩ - 126 எனும், முகவரியில் அமைந்துள்ளது - No.126, Nawala Road, Nugegoda.

பொருளடக்கம் பக்கம் எண்.


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 32 |
| 2. | பணிகள் மற்றும் செயல்பாடுகள் | 34 |
| 3. | ஆணைக்குழுவின் அமைப்பு | 35 |
| 4. | இலக்குகள் மற்றும் செயல்திறன் குறிகாட்டிகள் | 36 |
| 5. | செயல்திறன் சுருக்கம் – 2019 | 37-46 |
| 6. | வரவு செலவு ஏற்பாடுகள் மற்றும் நிதி முன்னேற்றம் - 2019 | 47 |
| 7. | இணைப்புகள் | |
| | இணைப்பு I - நிலையான சொத்துக்கள் கையகப்படுத்துதல் -2019 | 48 |
| | இணைப்பு II - நிதி நிலைமைக்கூற்று - 2019 | 49 |
| | இணைப்பு III - ஆணைக்குழு உறுப்பினர்களின் விவரங்கள் | 50 |
| | இணைப்பு IV - கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை – 2019 | 51-57 |
| | இணைப்பு V - நிறுவன கட்டமைப்பு | 58 |

## அறிமுகம்

1991 ஆம் ஆண்டு இலக்கம். 19 தாங்கிய தேசிய கல்வி ஆணைக்குழு சட்டத்தின் மூலம் தேசிய கல்வி ஆணைக்குழு தாபிக்கப்பட்டதானது, கல்விக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் பரந்த தேசிய கல்விக் கொள்கை தொடர்பாக ஜனாதிபதிக்கு பரிந்துரைகள்செய்தல் உள்ளிட்ட கல்விக் கொள்கையின் தொடர்ச்சியை உறுதிசெய்வதற்காக மற்றும் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்றவாறு கல்வி முறைமையின் ஏற்புடைமை குறித்து கருத்தாடல் செய்யவும் சமூகத்தின்,கல்விக் கொள்கையின்அனைத்து அம்சங்களிலும் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்யும் அபிலாசையிலாகும்.

இளைஞர்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் 4 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் கல்விக் கொள்கையில் ஒருமித்த கருத்தைஎட்டுவதை நோக்கமாகக் கொண்ட " கல்விக் கொள்கைக்கான தேசியக் கொள்கை ஆணைக்குழு " ஒன்றை நிறுவுவதற்கான அவசரத் தேவை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. " அத்தகையஆணைக்குழு உடனடியாக பத்தாண்டுத் திட்டத்தைத் தயாரிப்பதைத் தொடங்க வேண்டும் என்பதோடு 1991 ஆம் ஆண்டிலில் அந்தத் திட்டத்தை செயல்படுத்தத் தொடங்க வேண்டும் " என இளைஞர்களுக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிட்ட மேற்படி விடயங்களை அடிப்படையாகக்கொண்டு காலத்துக்கு காலம் ஏற்படும் அரசியல் மாற்றங்களின் காரணமாக ஏற்படுத்தப்படும் செல்வாக்குகளிலிருந்து விடுபட்டதான கல்வி முறைமைக்காக ஒரு நிலையான மற்றும் உறுதியான கொள்கையை வகுப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்காக 1991 ஆம்ஆண்டினஇலக்கம் 19 தாங்கிய தேசிய கல்வி ஆணைக்குழு சட்டத்தின் கீழ் தேசிய கல்வி ஆணைக்குழுதாபிக்கப்பட்டது. .

தேசியக் கலவி ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 2 (1) மற்றும்பிரிவு 2 (3) ஆகியவற்றின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் ஜனாதிபதியிடம்சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள் உள்ளடங்கிய அறிக்கையின் அடிப்படையில் கல்வியின்அனைத்து அம்சங்களுக்கும் பொறுப்பான அனைத்து அதிகாரங்களும் நிறுவனங்களும் இணங்க வேண்டிய தேசிய கல்விக் கொள்கை ஜனாதிபதியால் காலத்துக்கு காலம் அவ்வப்போது வெளியிடப்பட வேண்டும்.

ஆணைக்குழுவின் சட்டத்தின் பிரிவு 4 (1) இன்படி,ஆணைக்குழுவின் அமைப்பானது கல்வி,நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் ஆகிய துறைகளில்இயலுமை கொண்ட 10 பேர் மற்றும் அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்படும் 05 உறுப்பினர்களையும் ஜனாதிபதி நியமிப்பதோடு சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்படும் முழுநேர தலைவர் மற்றும் உப தலைவர் எனும் இருவரையும் ஆணைக்குழு கொண்டுள்ளது.

நோக்கு

இலங்கை அடையாளம் பாதுகாக்கப்படுகின்ற, அனைத்து சவால்களையும் எதிர் கொள்ள முடியும் என்பதை மற்றும் நியாயத்தை உறுதிப்படுத்துகின்ற, பரிபூரண கல்வியை அனைவருக்கும் வழங்கப்படுகின்ற, விரிவான தேசிய கொள்கைகட்டமை உருவாக்கல்

செயற்பணிகள்

தேசிய கல்வி கொள்கையில் குறித்த வேண்டுகோள் மற்றும் இலங்கையின் மாறிவரும் தேவைகளின் பின்னணியில் கல்வி அமைப்பின் அனைத்து துறைகளிலும் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குதல்

## பணிகள் மற்றும் செயற்பாடுகள்

தேசிய கல்வி ஆணைக்குழுவானது 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழு சட்டத்தின் கீழ் கல்வித் திட்டத்தின் அனைத்துத் துறைகளிலும் தேசிய கல்வி கொள்கைகள் தொடர்பாக அதிமேதகு ஜனாதிபதியிடம் பரிந்துரைகளை வழங்குவதன் நோக்கம் கொண்டு நிறுவப்பட்டது. அதன் முக்கிய செயல்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன

(அ) ஒரு விரிவான தேசிய கல்வி கொள்கையில் கல்விசார் கொள்கையில் தொடர்ச்சியை உறுதி செய்வதற்கும் கல்வி அமைப்பை சமூகத்தில் மாறிவரும் தேவைகளுக்கு பிரதிபலிப்பதற்கும், கல்வி கொள்கை மற்றும் திட்டத்தின் உடனடி மதிப்பாய்வு அல்லது திட்டங்கள் மற்றும் ஜனாதிபதிக்கு பரிந்துரைகளை தயாரித்தல்,

(ஆ) நடைமுறையில் உள்ள கல்விக் கொள்கை திட்டம் அல்லது திட்டங்களைக் காலத்துக்குக் காலம் பரிசீலனை செய்தலும் பகுப்பாய்வு செய்தலும் அத்துடன் தேவையானவிடத்து அத்தகைய கொள்கைகள் திட்டம் அல்லது திட்டங்களில் மாற்றங்களைச் செய்ய ஜனாதிபதிக்குப் பரிந்துலை செய்தல்.

(இ) ஆணைக்குழுவின் அறிவுரைக்காக ஜனாதிபதியால் ஆணைக்குழுவிற்கு குறிப்பிடப்படும், கல்வி தொடர்பான அனைத்து வி'யங்களிலும் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்தல்

**ஆணைக்குழுவின் அமைப்பு**

(அ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர்.

(ஆ) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் மற்றும் தொழில் கல்வி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி கல்வி ஆணைக்குழுவின் தலைவர்.

(இ) கல்வி மற்றும் உயர் கல்விக்கு பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு உறுப்பினர்.

(ஈ) நிதி பொருளாக பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு உறுப்பினர்.

(உ) மாகாண சபைகளின் விடயத்தில் பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு உறுப்பினர்

(ஊ) கல்வி, நிர்வாக அல்லது மேலாண்மை துறைகளில் சிறந்து விளங்கிய நபர்களிடமிருந்தும் அல்லது சில குறிப்பிட்ட தொழில்களில் விதிவிலக்கான திறன்களை நிரூபித்தவர்களிடமிருந்தும் பத்து உறுப்பினர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட வேண்டும். சட்டத்தின் பிரிவு 5 ன் கீழ் நியமிக்கப்பட்ட துணைத் தலைவர் (கொள்கை) மற்றும் துணைத் தலைவர் (திட்டமிடல்), முழு நேர அடிப்படையில் ஆணைக்குழுவிற்கு சேவை செய்ய வேண்டும்.

இந்த ஆணைக்குழு 126, நவால வீதி, நுகேகொடையில் அமைந்துள்ளது.

ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட்ட ஆணைக்குழுவின் செயலாளர் நிர்வாக செயல்பாடுகளை பொறுப்பேற்றுள்ளார். தற்போது ஆணைக்குழுவின் ஆளண 28 நிரந்தர ஊழியர்களைக் கொண்டுள்ளது.

**இலக்குகள் மற்றும் செயல்திறன் குறிகாட்டிகள் - 2019**

| | செயல்பாடு | குறிக்கோள | முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் |
|---|---|---|---|
| 1 | பாடசாலையை அடிப்படையாக கொண்ட தொழில் வழிகாட்டலிற்கான தேசிய கொள்கையை உருவாக்குதல் | பாடசாலையை அடிப்படையாக கொண்ட தொழில் வழிகாட்டலிற்கான ஓர் விரிவான கொள்கை சட்டகத்தை முன்மொழிய தற்போதுள்ள கொள்கைகளை மீள்சீர்தூக்கிப் பார்த்தல் | புதிய கொள்கை கிடைக்கப்பெறுதல் |
| 2 | பாடசாலை முறைமை குறித்த தேசிய கொள்கையை உருவாக்குதல் | இலங்கையின் பாடசாலை உள்ள சிக்கல்களைத் தீர்க்க புதிய கொள்கையை வகுத்தமைத்தல் | இலங்கையின் பாடசாலை முறை குறித்த புதிய கொள்கை கிடைக்கப்பெறுதல் |
| 3 | முன்பள்ளி கல்வி குறித்த தேசிய கொள்கையை உருவாக்குதல | இலங்கையின் முன்பள்ளியின் நோக்கங்களை அடைய உதவும் தரமான கல்வியை வழங்குவதை உறுதி செய்தல் | இலங்கையின் முன்பள்ளி கல்வி குறித்த புதிய கொள்கை கிடைக்கப்பெறுதல் |
| 4 | TVET ற்கான கொள்கை ஆவணத்தில் பல்வேறு பிரதிகளை அச்சிடுதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல் | முன்மொழியப்பட்ட கொள்கை முன்மொழிவுகளை அமுல்படுத்துத்துவதுனூடாக வேலை உலகிற்கான தேவையை உறுதிப்படுத்தல் | அச்சிடப்பட்ட கொள்கை ஆவணம் கிடைக்கப்பெறுதலும் பங்குதாரர்களிற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்தலும் |
| 5 | உயர் கல்வி மீதான கொள்கை முன்மொழிவுகளின் உருவாக்கி பூரணப்படுத்தல் | உயர் கல்வியில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகளை அடையாளங்காண்பதற்காக கொள்கை விதிமுறைகளை அறிமுகப்படுத்தல் | இலங்கையின் உயர்கல்வி தொடர்பான கொள்கை கிடைக்கப்பெறுதல் |
| 6 | செய்தித்தாளினை பிரசுரித்தல் | தேசிய ஆணைக்குழுவின் கல்விக் கொள்கை தொடர்பில் விழிப்புணர்வை கொண்டுவருதல் | செய்திதாளை பிரசுரித்தல் |
| 7 | ஆவண காப்பகத்தை ஏற்பாடு செய்தல் | நன்றாக நிறுவப்பட்ட ஆவண காப்பத்தின் கிடைப்பனவு | நன்றாக நிறுவப்பட்ட ஆவண காப்பத்தின் கிடைப்பனவு |

## செயல்திறன் சுருக்கம் – 2019

### அறிமுகம்

தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு உரித்தளிக்கப்பட்ட பிரதான தொழிற்பாடுகள் பின்வருமாறு மூன்று பிரதான வகைப்பாட்டிற்குள் வருகின்றது.

1. தற்போதிருக்கின்ற நிகழ்ச்சித்திட்டங்களை மீளாய்தல் மற்றும் பகுத்தராய்வதனூடாக நாட்டின் கல்விக் கொள்கை பற்றி மதிப்பிடுதல்.
2. தற்போதைய தேவைகளுக்கமைவாக கல்விக் கொள்கை முன்மொழிவுகளை நாளாது வரைப்படுத்துதல்.
3. மீளாய்வுகள், பகுப்பராய்வுகள், மதிப்பீடு மற்றும் நவீனமயப்படுத்துதலின் அடிப்படையில் சனாதிபதிக்கு கல்விக் கொள்கைகளைப் பரிந்துரைத்தல்.

மேலுள்ள தொழிற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கில் கல்வியின் மூன்று படிநிலைகளின் கீழ் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் மூன்று நிலையியற் கட்டளைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

1. பொதுக் கல்வி மீதான நிலையியற் குழு
2. உயர் கல்வி மீதான நிலையியற் குழு
3. தொழில்நுட்ப மற்றும் வாழக்கைத்தொழில் கல்வி மீதான நிலையியற் குழு

ஓவ்வொரு நிலையியல் குழுவும் சிறப்பு தொழில்சார் நிபுணர்கள் மற்றும் தனியார், அரச துறை யிலிருந்து உரிய துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நிபுணர்கள் உள்ளடங்கலாக 15 முதல் 20 வரையான முக்கிய அக்கறைதாரர்களைக் கொண்டிருக்கின்றது.

2019 ஆம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகளின் செயலாற்றுகையின் சுருக்கம் பின்வருமாறு:

### 1. பொதுக் கல்வி பற்றிய செயலாற்றுகை

1.1 பாடசாலையை அடிப்படையாக கொண்ட தொழில் வழிகாட்டுதல்கள் பற்றிய தேசிய கொள்கை உருவாக்குதல்.

தேசிய கல்வி ஆணைக்குழுவானது பாடசாலை அடிப்படையிலான தொழில் வழிகாட்டல் பற்றிய தேசிய கொள்கை ஒன்றை உருவாக்கவேண்டியோ அல்லது தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2016 ஆம் ஆண்டின் கொள்கை ஆவணத்தில் தொழில் வழிகாட்டல் பற்றிய தற்போதைய அத்தியாயத்தை இற்றைப்படுத்தவோ அவசியத்தை உணர்ந்திருந்திருந்தது.. இவ் முன்முயற்சிக்காக இலங்கையில் உள்ள பிரித்தானிய கவுன்சில் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கியுள்ளது.

பங்குதாரர்கள் பாடசாலை அதிபர்கள், தொழில் நெறி வழிகாட்டும் பொறுப்பு ஆசிரியர்கள், தொழில் நெறி வழிகாட்டும் பொறுப்பு டைய அரசு நிறுவன அலுவலர்கள், தொழில் நெறி வழிகாட்டும் பொறுப்பு டைய அரசு நிறுவன அலுவலர்கள், தொழில் நெறி நெறிகள், தொழில் நிறுவனங்கள், இளைஞர் அமைப்புகள் போன்றனவற்றின் மூலம் தேசிய தொழில் நெறிகள் குறித்து கீழ்க்கண்ட வாறு ஆலோசனை வழங்கப்பட்டது.

#### (அ) முதற்கட்ட கருத்தரங்கு

பாடசாலையை அடிப்படையாக கொண்ட தொழில் வழிகாட்டல் தொடர்பான முதற்கட்ட கருத்தரங்கானது 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி பிரித்தானிய பேரவையுடன் இணைந்து இலங்கை மன்றத்தில் நடைபெற்றது. பாடசாலை சார்ந்த தொழில் நெறி வழிகாட்டும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களை அடையாளம் காணும் வகையில் இந்த கருத்தரங்கு நடத்தப்பட்டது.

தேசிய தொழிற்பழகுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை (NAITA), தேசிய தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை நிலையம், கல்வி அமைச்சு, மூன்றாம் நிலை மற்றும் தொழில் சார் கல்வி ஆணைக்குழு, தேசிய மனிதவள அபிவிருத்தி ஆணைக்குழு (TVEC), தேசிய மனிதவள அபிவிருத்தி சபை (NIE), மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம், தேசிய இளைஞர் படையணி (NYC), இலங்கை அறக்கட்டளை, பல்கலைக்கழகங்கள், மாவட்ட செயலகங்கள், பாடசாலைகள், தேசிய இளைஞர் சேவைகள் சபை (NYSC), கல்வி அமைச்சு, இலங்கை தொழில்சார் சங்கம் மற்றும் இலங்கை தொழில் நெறி வழிகாட்டல் நிறுவகம் ஆகிய அமைப்புகள் இந்த கருத்தரங்கில் கலந்து சிறப்பித்தது.

**(ஆ) பாடசாலை தொழில் வழிகாட்டல் அலகுகளின் அவதான ஆய்வு**

கல்வி அமைச்சினால் பாடசாலையின் அடிப்படையில் தொழில் வழிகாட்டல் வெளியிடப்பட்ட 15.01.2013 திகதியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 06/2013 இன் மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை இந்த பாடசாலைகள் எவ்வளவு தூரம் நடைமுறைப்படுத்தியுள்ளது என்பதை தேசிய கல்வி ஆணைக்குழு அதிகாரிகள் ஆய்வு செய்ய மூன்று மாகாணங்களை (மேற்கு, சபரகமுவ மற்றும் வட மத்திய) தெரிவு செய்த அதில் 10 பாடசாலைகளை பார்வையிட்டுள்ளனர்.

பாடசாலை முறைமையின் பொதுவான பண்புகளைக் கருத்தில் கொண்டு 10 பாடசாலைகள் மாதிரிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டது. பாடசாலைகளிற்கிடையிலான வேறுபாடுகள், பாடசாலைகளின் அமைவிடம் போன்றவைகளும் வேறுசில நியாயப்படுத்தப்படுத்தல்களையும் உள்ளடக்கியது.

இதன்படி. பாடசாலையின் தொழில் வழிகாட்டலுக்கு பொறுப்பான ஆசிரியர்கள். அதிபர்கள் மற்றும் தரம் 13 மாணவர்கள் ஆகியோர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். இந்த நேர்காணல்கள் மூன்று வகையான கட்டமைக்கப்பட்ட கேள்வித் தாள்களின் அடிப்படையில் நடாத்தப்பட்டன. பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட தொழில் வழிகாட்டல் தொடர்பாக கல்வி அமைச்சினால் 15.01.2013 ஆந் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை 06/2013 இன் மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை இப்பாடசாலைகள் நடைமுறைப்படுத்தவில்லை.

கல்வி அமைச்சினால் பாடசாலை தொழில் வழிகாட்டல் தொடர்பாக வெளியிடப்பட்ட 15.01.2013 ஆம் இலக்க இலக்க 06/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மீது தமது கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கு மூன்று மாகாணங்களின் (மேல், சபரகமுவ மற்றும் வடமத்திய) பத்து (10) பாடசாலை அதிபர்களுடனான சந்திப்பு NEC இல் 2019 யூலை 15 ஆம் திகதி நடைபெற்றது.

மேலும், பாடசாலை சார்ந்த தொழில் வழிகாட்டல் மற்றும் மேற்படி சுற்றறிக்கையினை நடைமுறைப்படுத்தல் தொடர்பான விடயங்கள் தொடர்பாக 2019 யூலை மாதம் 23 மற்றும் 26 ஆம் திகதிகளில் இலங்கை மன்றத்தில் 2019 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23 ஆம் திகதிகளில் பாடசாலைகளில் தொழில் வழிகாட்டல் பொறுப்பிலுள்ள 40 பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்குபற்றும் பொருட்டு இரண்டு தனித்தனி செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

**(இ) மூன்று - நாள் அறிவுப் பகிர்வு பட்டறை**

ஓர் மூன்று - நாள் அறிவு பகிர்வு பட்டறையானது 20 வது மார்ச் 20 முதல் 22 மார்ச் 2019 இங்கிலாந்துஇங்கிலாந்தில் காணப்படும் தொழில் வழிகாட்டல் அமைப்பு கூறுகளில் சிறந்த நடைமுறைகளை அடையாளம் காணும் பொருட்டு கொழும்பு, Movenpick ஹோட்டலில் பிரிட்டிஷ் கவுன்சிலுடன் இணைந்து நடத்தப்பட்டது.

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை (NAITA), தேசிய தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை நிலையம், கல்வி அமைச்சு, மூன்றாம் நிலை மற்றும் தொழில்

சார் கல்வி ஆணைக்குழு (TVEC), தேசிய மனிதவள அபிவிருத்தி சபை (TVEC), தேசிய மனிதவள அபிவிருத்தி சபை (NIE), மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம், தேசிய இளைஞர் படையணி (NYC), இலங்கை அறக்கட்டளை, பல்கலைக்கழகங்கள், மாவட்ட செயலகங்கள், பாடசாலைகள், தேசிய இளைஞர் சேவைகள் சபை (NYSC), கல்வி கல்லூரிகள் , இலங்கை தொழில்சார் சங்கம், இலங்கை தொழில் வழிகாட்டல் நிறுவனம் போன்ற நிறுவனங்களின் அமைப்பு இந்த பயிலரங்கில் கலந்துகொண்டன.

மேலும். Career Connect, Liverpool இருந்து தொழில் வழிகாட்டல் சம்பந்தப்பட்ட இரண்டு நிபுணர்கள் வளவாளர்களாக பட்டறையில் கலந்து கொண்டனர்.

**(ஈ) தொழில்தருநர் பிரதிநிதிகளுடனான கலந்தாலோசனை**

பாடசாலைக் கல்விக்கும் தற்போதுள்ள வேலைச் சந்தைக்கும் இடையிலான பொருத்தமின்மைகளை இனங்கண்டு பாடசாலை தொழில் நெறி வழிகாட்டலில் தொழில் தருநர் ஈடுபாட்டை இனங்காணும் பொருட்டு, இலங்கையின் முக்கிய புகழ்பெற்ற நிறுவனங்களின் தொழில் வழங்குனர்களின் பிரதிநிதிகளின் பங்களிப்புடன் 2019 மே மாதம் 10 ஆம் திகதி இலங்கை மன்றத்தில் செயலமர்வு ஒன்று நடத்தப்பட்டது.

**(உ) இளைஞர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான கலந்தாலோசனை**

மேலும், தொழில் வழிகாட்டல் பற்றிய கொள்கையை உருவாக்குவதற்கான கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கு அரச மற்றும் அரச சார்பற்ற இளைஞர் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் 2019 மே மாதம் 15 ஆம் திகதி இலங்கை மன்றத்தில் இளைஞர்களிற்கான பேரவை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**(ஊ) பிரதான – குழு கூட்டங்கள்**

தொழில் வழிகாட்டல் மீதான கொள்கை வரைவை முன்னெடுப்பதற்காக தேசிய இளைஞர் சேவைகள் சபை, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு, சிறி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம், ரஜரட்ட பல்கலைக்கழகம் போன்றவற்றின் உரிய அலுவலர்களின் பங்களிப்புடன் 2019 ஏப்ரல் 25ம் திகதி NIE இல் முதலாவது முக்கிய குழுகூட்டம் நடத்தப்பட்டது.

மேலதிகமாக, 2 வது மற்றும் 3வது பிரதான - குழு கூட்டங்கள் 27 ஆகஸ்ட் மற்றும் 05 செப்டம்பர் 2019 அன்று NECயில் நடத்தப்பட்டன தொழில் வழிகாட்டல் மீதான பட்டறைகள் / கூட்டங்கள் / கருத்தரங்குகள் முதலியன தொழில் வழிகாட்டல் / கருத்தரங்குகள் முதலியன பங்குதாரர்களிடமிருந்து பெறப்பட்ட உள்ளீடுகள் / கருத்துக்களை கருத்தில் கொண்டு தொழில் வழிகாட்டல் மீது கொள்கை முன்மொழிவுகளை வரைய உதவுகின்றன.

பாடசாலைகளுக்கான தேசிய கொள்கை முன்மொழிவுகளின் மீதான முன்வரைவு கொள்கை ஆவணம் - பங்காளர்களிடமிருந்து பெறப்பட்ட உள்ளீடுகள் / கருத்துக்களைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட தொழில் வழிகாட்டல் பற்றிய வரைவு ஆவணமானது 2019 நவெம்பரில் 11ம் திகதி அன்று நடைபெற்ற 7வது ஆணைக்குழுவின் 296ஆவது ஆணைக்குழுவின் கூட்டத்தில் அதன் அங்கீகாரத்திற்காக வைக்கப்பட்டது.

பாடசாலையை அடிப்படையாக கொண்ட தொழில் வழிகாட்டல் தொடர்பான கொள்கை ஆவணத்தின் கொள்கை முன்மொழிவுகளை அமுலாக்குவதற்கு திட்ட வரைபடத்தை தயார் செய்யும் பொருட்டு, 2019 டிசம்பர் 04 ஆம் திகதி கொழும்பிலுள்ள மூவன்பிக் ஹோட்டலில் ஒரு செயலமர்வு நடத்தப்பட்டது.

இங்கிலாந்தின் கேரியர் கனெக்ட் நிறுவனத்தின் வளவாளரும் இந்த பயிலரங்கில் பங்கேற்றார்.

### 1.2 பாடசாலைக் கல்வி முறைமைக்கான கொள்கையை வகுத்தமைத்தல்

2016 ஆம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக்குழு கொள்கைச் சட்டகத்தில் பாடசாலைக் கல்வி முறைமை பற்றிய அத்தியாயம் ஒன்றில்லையாகையினால், பாடசாலைக் கல்வி முறைமை பற்றிய கொள்கைக் கட்டமைப்பொன்றினை வகுத்தமைப்பதன் தேவைப்பாடு இனங்காணப்பட்டுள்ளது.

இலங்கையில் பாடசலை முறைமை தொடர்பில் பல பிரச்சினைகள் உள்ளன. பாடசாலை முறைமையிலிருக்கின்ற பாரிய பிரச்சினைகளிலொன்று பாகுபாடாகும். இதற்கு மேலதிகமாக, நகரப் பிரதேசங்களிலிருக்கின்ற இரண்டாம் தரப் பாடசாலைகள் சில கிராமப் பிரதேசங்களிலிருக்கின்ற பாடசாலைகளிலும் பார்க்க அதிகளவு மேல்நிலையிலிருக்கின்றன. இதன் விளைவாக, அதிக எண்ணிக்கையான கிராமப் பிள்ளைகள் கிரமாத்திலிருந்து நகரத்திற்கு மாறுகின்றனர். மத்திய பாடசாலை முறைமை மாதிரி கைவிடப்பட்டுள்ளதன் காரணமாக இரண்டாவது நிலைக் கல்வி வசதிகள் மற்றும் வாய்ப்புகள் கிராமப் பிரதேசங்களில் போதுமானளவு முன்னேற்றமடைந்துள்ளன.

மேலுள்ளதன்படி, இலங்கையில் தற்போதுள்ள கல்வி முறைமையை மீள் பார்வையிடுவதற்கு சப்பிரகமுவ மாகாணத்தில் கணக்காய்வொன்று நடாத்தப்பட்டது. இது தொடர்பில், சப்பிரகமுவ மாகாண பிரதம செயலாளருக்கும், கல்விப் பணிப்பாளருக்குமிடையில் கூட்டமொன்று நடைபெற்றிருந்தது. ,தன்படி, ,ந்தக் கணக்கெடுப்பிற்கு தேவையான நிதியினை ஒதுக்குவதற்கு சப்பிரகமுவ மாகாணத்தின் பிரதம செயலாளர் ,ணங்கியுள்ளார். சப்பிரகமுவ மாகாண அதிபர்கள், அசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடமிருந்து வினாத்தாள்கள் மற்றும் நேர்காணலினூடாக தரவுகளைத் திரட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(அ) ஓர் கலந்துரையாடலானது தெற்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய எட்டு மாகாணங்களின் கல்விப் பணிப்பாளர்களுடன் 2018 நவம்பர் மாதம் 5ம் திகதி நடாத்தப்பட்டது.

(ஆ) ஓர் சந்திப்பானது இரத்தினபுரி வலயக் கல்வி பணிப்பாளர்களுடன் 23.11.2018 அன்று தேசிய கல்வி நிறுவகத்தில் நடாத்தப்பட்டது.

(இ) இரத்தினபுரியில் சபரகமுவ மாகாணத்தின் கல்வி பணிப்பாளர்களுடன் 2018.12.18 ஆம் திகதி கலந்துரையாடல் நடைபெற்றது

(ஈ) 2018.12.20 ஆம் திகதியன்று மேல் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுடன் தேசிய கல்வி நிறுவகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

(உ) பாடசாலை முறைமை தொடர்பான கொள்கை உருவாக்கம் தொடர்பில் 2019 ஏப்ரல் 03 ஆம் திகதி எஹலியகொட மெனரிபிட்டிய ஆசிரியர் பயிற்சி நிலையத்தின் சப்ரகமுவ மாகாண ஆசிரியர்களுடன் செயலமர்வு ஒன்று நடைபெற்றது.

(ஊ) தற்போதைய நிலை மற்றும் பாடசாலை முறைமை தொடர்பான பிரச்சினைகள் குறித்து விவாதிக்க கூட்டமானது 2019 ஜூன் 13 அன்று தேசிய கல்வி ஆணைக்குழுவில் நடைபெற்றது. தமிழ்ப் பாடசாலைகள், முஸ்லிம் பாடசாலைகள், அரச பாடசாலைகள், தேசியப் பாடசாலைகள், தனியார் பாடசாலைகள் ஆகியவற்றுக்கு பொறுப்பாகவுள்ள கல்வி அமைச்சினது பணிப்பாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர், மதரஸா பாடசாலைகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக இந்த கூட்டத்தில் கலந்து கொண்டார்.

(எ) இரண்டு தனித்தனி கூட்டங்களானவை சர்வதேச பாடசாலைகளின் அதிபர்களுடனும் தனியார் பாடசாலை அதிபர்களுடனும் முறையே 2019 ஜூன் 19 மற்றும் 25 ஆம்

திகதிகளில் NIE இல் தற்போதைய நிலை மற்றும் முறைமையின் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுவதற்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

சப்ரகமுவ மாகாணத்தினை அடிப்படையாக கொண்ட பாடசாலை முறைமை மீளாய்வு தொடர்பான ஆலோசனை அடங்கிய ஆவணம் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இலங்கையில் கிடைக்கப்பெறும் அனைத்து ஆய்வுகளும், பாடசாலை முறைமை தொடர்பான ஆய்வு அறிக்கைகள் போன்றவை மேற்படி அறிக்கையினைத் தயாரிக்க ஆய்வு செய்யப்பட்டன. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு (OECD) மற்றும் உலக வங்கி அறிக்கைகளும் ஆராயப்பட்டுள்ளன.

### 1.3 முன் பள்ளிக் கல்வி பற்றிய தேசிய கொள்கையொன்றினை வகுத்தமைத்தல்

தேசிய கொள்கை சட்டகத்தின் வழிகாட்டல் இன்றி நகரும் சூழ்நிலையின் கீழ் முன்பள்ளிக் கல்வி பற்றிய கொள்கை ஒன்றை உருவாக்கவேண்டியதன் அவசியத்தை தேசிய கல்வி ஆணைக்குழு கண்டறிந்தது. எனவே, முன்பள்ளிக் கல்வி தொடர்பான விரிவான கொள்கை ஆவணத்தை உருவாக்குவதற்கான அனைத்து பங்குதாரர்களுடனும் கொள்கை கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்கு தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முன்பள்ளிக் கல்விக்கான தேசியக் கொள்கையை உருவாக்குவதற்காக நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை யுனிசெப் நிறுவனம் அதன் ஒத்துழைப்பை வழங்கியிருந்தது.

கல்வி அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவனம், முன்பள்ளிக்கு பொறுப்பான மாகாண அதிகாரிகள், பொதுக் கல்விக்கான தேசிய கல்வி ஆணைக்குழுவின் நிலைக்குழு உறுப்பினர்கள் மற்றும் தனியார் முன்பள்ளிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் களின் பங்களிப்புடன் தேசிய கல்வி ஆணைக்குழுவில் 07.06.2018 அன்று ஆரம்ப கட்ட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

மேலும், 2வது பயிற்சிப் பட்டறையானது 12.10.2018 அன்று இலங்கை கல்வி அமைச்சின் பிரதிநிதிகளுடன் இலங்கை மன்றத்தில் நடைபெற்றது. மாகாண கல்வி அதிகாரிகள், தேசிய சிறுவர் அபிவிருத்தி அதிகாரசபை, மகளிர் விவகார அமைச்சு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம், முன்பள்ளிக் கல்வி நிபுணர்கள், பொதுக் கல்விக்கான தேசிய கல்வி ஆணைக்குழுவின் நிலைக்குழு உறுப்பினர்கள், யுனிசெப் மற்றும் தனியார் முன்பள்ளி பிரதிநிதிகள் முன்பள்ளிக் கல்வி பற்றிய கொள்கை உருவாக்கத்திற்கான கருத்துக்களையும் பரிந்துரைகளையும் பெறுவதற்கு வரவழைக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி பயிற்சிப்பட்டறையில் (அ) சிறுவர் செயலகம் (ஆ) கல்வி அமைச்சு (இ) கல்வி அமைச்சு, மேல் மாகாணம் (ஈ) ஆரம்ப நிலை குழந்தைப்பருவம் மற்றும் ஆரம்பக் கல்வித்திணைக்களம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் (உ) தேசிய கல்வி நிறுவனம் (ஊ) லைசீம் சர்வதேச பாடசாலை ஆகியன முன்பள்ளிக் கல்வி தொடர்பான ஒவ்வொரு அதிகாரங்களின் பங்குகளையும் பொறுப்புக்களையும் அடையாளம் காணுவது தொடர்பில் காட்சி விளக்கவுரைகளை வழங்கியிருந்தன.

மேலும், பயிலரங்கின் இரண்டாவது அமர்வில் ஐந்து (05) குழுக்கள் ஐந்து தலைப்புகளில் ஆய்வு செய்யவும் முன்பள்ளிக் கல்வி தொடர்பான கொள்கை முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காகவும் நியமிக்கப்பட்டனர்.

(அ) தேசிய சிறுவர் கல்வி அறக்கட்டளை, பெருந்தோட்ட மனித அபிவிருத்தி அறக்கட்டளை மற்றும் தனியார் முன்பள்ளி பிரதிநிதிகளுடன் 13.11.2018 அன்று முன்பள்ளிக் கல்வியில் பொது ∴ தனியார் பங்காண்மை பற்றி கலந்துரையாடுவதற்கான ஒரு கூட்டம்.

(ஆ) 13.12.2018 அன்று ஒரு கூட்டம் பொது ∴ தனியார் துறை பங்கு தாரரின் பங்கேற்புடன் முன்பள்ளி கல்வி கற்றல் சூழலை அடையாளம் காண, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,

தேசிய கல்வி நிறுவனம், தேசிய குழந்தைகள் கல்வி அறக்கட்டளை, முன்குழந்தை வளர்ச்சி அதிகாரிகள் மற்றும் பொது கல்வி நிலைக்குழு உறுப்பினர்கள்.

(இ) 21.12.2018 அன்று முன்பள்ளி ஆசிரியர் அபிவிருத்தி தொடர்பாக ஆசிரியர் பயிற்சி நிறுவன அதிகாரிகளுடன் ஒரு கூட்டம்.

(ஈ) முன்பள்ளிக் கல்விக்கு பொறுப்பான மாகாணபணிப்பாளர்களின் பங்களிப்புடன் 2019.01.11 ஆம் திகதியன்று முன்பள்ளிக் கல்வி தொடர்பாக மாகாணப் பங்கு பற்றிய கலந்துரையாடல்.

பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பங்குதாரர்களின் பங்களிப்புடன், 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி முன்பள்ளி கல்வி தொடர்பான செயலமர்வு ஒன்று தேசிய கல்வி நிறுவனத்தில் நடாத்தப்பட்டது. கல்வி அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவனம், தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி ஆணைக்குழு, முன்பள்ளி மாகாண உத்தியோகத்தர்கள், முன்பள்ளிக் கல்வி நிபுணர், பொதுக் கல்விக்கான நிலைக்குழு உறுப்பினர்கள், யுனிசெப், சேவ் த சில்ரன் போன்றனவற்றிடமிருந்து செயலமர்வில் பெறப்பட்ட கருத்துக்கள் / முன்மொழிவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வரைவு கொள்கை ஆவணத்தின் வரைவதற்கு மேற்படி விசேட சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்வி அமைச்சு, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவனம், தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி ஆணைக்குழு, , முன்பள்ளி பொறுப்பதிகாரி, முன்பள்ளி கல்வி சிறப்பு, பொது கல்வி நிலைக்குழு உறுப்பினர்கள், யுனிசெப், சேவ் த சில்ரன் முதலியன முன் பள்ளி கல்வி கொள்கை இறுதி செய்வதற்கு முன் மேலும் கருத்துக்கள் / உள்ளீடுகளை பெறும் நோக்கில் 18ம் திகதி யூலை 2019 அன்று பங்குதாரர்களுடனான பயிற்சி பட்டறை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

2019 யூலை 24 ஆம் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் இறுதி கொள்கை ஆவணத்திற்கான பொதுக் கல்வி க்கான நிலைக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்டது.

2019 ஆகஸ்ட் 08 ஆம் திகதி நடைபெற்ற 293ஆவது ஆணைக்குழுகூட்டத்தில் கொள்கை ஆவணத்தை அச்சிட்டு ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கு ஆணைக்குழுவின் அனுமதி யும் வழங்கப்பட்டது.

முன்பள்ளிக் கல்வி பற்றிய கொள்கை ஆவணம் 2019 ஒக்டோபர் 15 ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. முன்பள்ளிக் கல்வி பற்றிய கொள்கை ஆவணத்தை தேசிய கொள்கையாக பிரகடனப்படுத்துவதற்கான அமைச்சரவையின் அனுமதியைக் கோரி அதிஉயர் ஜனாதிபதியினால் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

## 2. உயர் கல்வி மீதான செயலாற்றுகை

### 2.1 உயர் கல்வி பற்றிய கொள்கையை வகுத்தமைத்தல்

உயர் கல்வி பற்றிய கொள்கையை வகுத்தமைத்தல், தற்போதிருக்கின்ற உயர் கல்விப் பிரச்சினை களைத் தெரிவிப்பதற்கு சிறந்த உயர் கல்விக் கொள்கையொன்றுக்கான தேவையைக் கவனத்தில் கொண்டு உயர் கல்வி முறைமைக்கான கொள்கை வழிகாட்டலை அறிமுகப்படுத்தும் நோக்கத் துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதிருக்கின்ற கொள்கைப் பொருளடக்கத்தை மீள நோக்குவதற்கும், முறைமையினால் முகம் கொடுக்கப்பட்ட தற்போதிருக்கின்ற பிரச்சினைகளை ,னங்காண்பதற்கும், முன்னுள்ள போக்குகளை ,னங்காண்பதற்கும் எட்டு ஆராய்ச்சி அணிகள் நியமிக்கப்பட்டிருந்தன.

இதன்படி, பின்வருகின்ற எட்டு விடயப்பொருட்களை மேவுவதற்காக நியதிக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டிருந்தன. (அ) ஆளுகை, நிதி மற்றும் வள முகாமைத்துவம் (ஆ) பட்டப்பிற்படிப்பு கல்வி மற்றும் ஆராய்ச்சி (இ) மாணவர் நலன்புரி மற்றும் ஒழுக்கம் (ஈ) தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை (உ) உயர் கல்வி, மாணவர் அனுமதியை அணுகுதல் மற்றும் புதிய பாடங்கள் /ஒழுக்கங்களுக்கான கேள்வியை இனங்காணுதல் (ஊ) தனியார் உயர் கல்வி மற்றும் அரச,தனியார் பங்குடமை (எ) கல்வி மற்றும் கல்விசாரா பதவியினரின் அபிவிருத்தி (ஏ) அரச மற்றும் அரசு சாரா உயர்கல்வி நிறுவனங்களின் தர உறுதிப்பாடு மற்றும் சான்றுப்படுத்தல்.

(அ) மேலுள்ள உரிய குழுக்களிடமிருந்து பெறப்பட்ட இடைக்கால அறிக்கைகளையும், தேசிய கல்வி ஆணைக்குழுவினால் பெறப்பட்ட அனைத்து இறுதி வரைவு ஆராய்ச்சி அறிக்கைகளையும் மீள நோக்குவதற்காக 2018 ஓகஸ்ட் 03 மற்றும் 13 ஆம் திகதிகளில் ,ரண்டு பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்பட்டன.

(ஆ) அறிக்கைகளில் சிலவற்றை நிறைவுறுத்துவதற்கு 2018 நவம்பர் 26 டிசெம்பர் 17 ஆம் திகதி மீள் நோக்கு குழாமுடன் இரு பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்பட்டது.

(இ) கொள்கை ஆவணத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான உள்ளீடுகள்/கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள், உப வேந்தர்கள், பட்டப்பின்படிப்பு நிறுவனங்களின் பணிப்பாளர்கள் மற்றும் பல்கலைக்கழக ங்களின் பீடாதிபதிகள் உள்ளிட்ட தொடர்புடைய பங்காளர்களின் பங்கேற்புடன் 2019 யூன் 10 ஆம் திகதி இலங்கை மன்றத்தில் செயலமர்வு ஒன்று இடம்பெற்றது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் (FUTA) கூட்டமைப்பு, உயர்கல்வி அமைச்சு, தனியார் துறை உயர் கல்வி அமைப்புகள் போன்றவற்றின் பிரதிநிதிகளை அழைத்து இரண்டாவது செயலமர்வு 2019 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 01 ஆம் திகதி இலங்கை மன்றத்தில் நடைபெற்றது.

உயர்கல்வி தொடர்பான கொள்கை ஆவணத்தின் ஆங்கில பதிப்பு 2019 ஆகஸ்ட் 08ம் திகதி நடைபெற்ற 293ஆவது ஆணைக்குழு கூட்டத்தில் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் அச்சிடப்பட்டது.

## 3. தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி மீதான செயலாற்றுகை

### 3.1 தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி பற்றிய கொள்கையை வகுத்தமைத்தல்

தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைத்தொழில் பற்றி தற்போதிருக்கின்ற கொள்கைக் கட்டுப்பாடு 2009ம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டது. சமூக பொருளாதார மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திகள், தற்போதிருக்கின்ற கொள்கையை மீள் நோக்குவதற்கும், வேலை உலகின் தேவைப்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு புதிய கொள்கை ஆவணமொன்றை வகுத்தமைப்பதற்குமான தேவைப்பாடு கடந்த தசாப்தத்தின் போது உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் ஏற்பட்டுள்ளன.

இதன்படி, 2017 ஆம் அண்டில் ஆரம்பப் பயிற்சிப்பட்டறையொன்றை நடாத்துவதன் மூலம் தொழில் நுட்பம் மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி மீதான கொள்கைகளை வகுத்தமைப்பதனை தேசிய கல்வி ஆணைக்கு ஆரம்பித்துள்ளது. ஒன்பது (09) கொள்கை வகுத்தமைக்கும் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன், சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள், 2018 யூலை மாதத்தில் அக்கறைதாரர் பயிற்சிப்பட்டறையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இறுதி வடிவமெடுத்திருந்த அறிக்கைகளுக்கு தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைத்தொழில் மீதான நிலையியல் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

முன்மொழியப்பட்ட கொள்கை ஆவணம் ஒன்பது விடயப்பரப்புகளில் அவதானஞ் செலுத்துகின்றது. (அ) தொழில்நுட்பம் மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்விப் பயிற்சியை அடைவதனை அதிகரித்தல் (ஆ) பௌதீக, நிதி மற்றும் மனித வளங்களின் உச்சப் பயன்பாடு (இ) செய்ததை மீண்டும் செய்வதனைக் குறைப்பதற்கு பிராந்திய மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் அறிவுசார் விளக்கம் (ஈ) தொழில்நுட்பம் மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்விப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் உகந்ததன்மை மற்றும் தரம் (உ) பொதுக் கல்வி மற்றும் உயர் கல்வியுடன் தொழில்நுட்பம் மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்விப் பயிற்சிக்குமிடையிலான தொடர்பு (ஊ)கல்விசார் மற்றும் நிர்வாகத்துறை ஊழியர்களின் TVET துறையின் வேலைவாய்ப்பு நியமனங்கள் மற்றும் தொழிற்துறை முன்னேற்றம் (எ) பாதிப்படையக்கூடிய, வசதியற்ற மக்கள் தொழில்நுட்பம் மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்விப் பயிற்சியினை அடைதல் (ஏ) தகவல்களைச் சேகரித்தல், பரப்புதல் மற்றும் தொழில் வழிகாட்டல்

தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்வி தொடர்பான அச்சிடப்பட்ட கொள்கை ஆவணமானது 2019 மே 3 ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் அதிமேதகு ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதிஉயர் ஜனாதிபதியினால் அமைச்சரவைப் பிரமாணக் குறிப்புக்காக சமர்பிக்கப்பட்டு பின் தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்வி மீதான தேசிய கொள்கைக்கான அமைச்சரவையின் அங்கீகாரம் 2019 ஓகஸ்ட் 20 ஆம் திகதி வழங்கப்பட்டது.

தொழில் மற்றும் வர்த்தக நீண்டகால இடம்பெயர்ந்துள்ளவர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து TVET துறையின் பங்குதாரர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்வி தொடர்பான தேசிய கொள்கை ஆவணத்தில் உள்ள கொள்கை வழிகாட்டல்கள் பற்றிய விளக்கத்தினை வழங்குவதற்காக 2019 ஒக்டோபர் 10 ஆம் திகதியன்று கொள்கை பரப்புகை கருத்தரங்கு ஒன்று BMICH இல் நடாத்தப்பட்டது.

2019 ஒக்டோபர் 10 ஆம் திகதி BMICH இல் நடைபெற்ற கருத்தரங்கிற்குப் பின்னர் தொழில் மற்றும் வர்த்தக நீண்டகால இடம்பெயர்ந்துள்ளவர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் தொழில் சார் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் அவர்களால் வருகின்ற 2020 ஆம் ஆண்டு முதல் தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வி தொடர்பான கொள்கை முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக 2019 ஒக்டோபர் 11 ஆம் திகதி அமைச்சில் கலந்துரையாடல் நடைபெற்றது.

